ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/8 - 2022 පෙබරවාරි මස 28 වැනි සඳුදා - 2022.02.28

*2269/8 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாணசபை அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டளை***

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, இங்கு கீழே குறிப்பிடப்படும் கட்டளைகளை இத்தால் வெளியிடுவதாக அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் கார் வீஎஸ்வி யூஎஸ்பி,
பீஎச்டி (சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீ லங்கா) என்டிசீ,
பீஎஸ்சீ,
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்,
மேல் மாகாண சபை கட்டடம்,
பத்தரமுல்லை,
2022, பெப்புருவரி 28.

1A - PG 5761 — 20 (2022/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

1. *2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களின் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டான பிரதேச சபையயின் தலைவராக செயற்பட்ட எம். நந்த விஜேரத்ன சில்வா என்பவர் அத் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக கருதுவதற்கு காரணங்கள் உள்ளபடியாலும், தலைவர் பதவி வெற்றிடமாகி அப் பிரதேச சபைக்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 8(4) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் பிரதித் தலைவரினால் தலைவர் பதவிக்குரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளபடியாலும், அப் பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்காததன் காரணமாகவும், கட்டான பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தின் பொது மக்களின் நன்மைக்காக பிரதேச சபையாக செயற்படுத்துவதற்கு ஏதாவது ஒரு முறையில் தடை ஒன்று ஏற்படுவதை தடுக்க வேண்டியுள்ளபடியாலும், அதற்குரிய எழுத்து மூலமான சட்டங்களைத் தீர்மானிப்பதற்காகவும் இக் கட்டளை மேற்கொள்ளப்படுகின்றது.*

2. *2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க 2022 ஆம் ஆண்டுற்காக மேல் மாகாணத்தின் கட்டான பிரதேச சபையினால் 2021, திசெம்பர் 31 ஆந் திகதியினை இறுதியாக கருத்திற் கொண்டு அப் பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் நிறைவேற்றப்படாத படியால் உரிய பிரதேச சபையினால் எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் வரையிலான கால எல்லைக்காக 2022 ஆம் ஆண்டின் நிதியாண்டுக்காக அப் பிரதேச சபைக்காக அதன் செயலாளரினால் தயாரிக்கப்பட்டு பிரதேச சபை அமைந்துள்ள கம்பஹா மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க உரிய பிரதேச சபையினால் பொது மக்களின் நன்மைக்காக சேவைகளைப் பேணிச் செல்வதற்கு உரியதாக வருமானம் மற்றும் வெலவுகளைப் பேணிச் செல்வது சட்டரீதியானதாகும்.*

3. *இக் கட்டளையில் குறிப்பிடப்படும் எல்லா ஏற்பாடுகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவுகளின் கீழுயான ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக நடைமுறைக்கு வர வேண்டும்.*

4. *இக் கட்டளையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு இடையே ஏதாவது ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே அதிகாரம் பெறவேண்டும்.*

EOG *2-0686*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.